**கவனிக்க**.- *2016.03.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1958 - 2016 මාර්තු මස 11 වැනි සිකුරාදා - 2016.03.11

*1958 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 374 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 379 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதி அமைச்சு

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின்கீழ் (திடீர்) மரண விசாரணையாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்களைக் கோருதல்*

இதன்கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் வெற்றிடமாகவுள்ள (திடீர்) மரண விசாரணையாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு 2016.03.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "(திடீர்) மரண விசாரணையாளர் பதவி, பேராதனை பொது வைத்தியசாலை" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. இப்பதவி அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியொன்றல்ல. இப்பதவிக்கு நியமிக்கும் திகதி தொடக்கம் ஐந்து ஆண்டு காலத்துக்கு செல்லுபடியாகின்றவாறு இப்பதவியில் நியமிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் நீதிவானினதும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினதும் சிபார்சுகள் மற்றும் மருத்துவ சிபார்சுகளை ஆராய்ந்து பார்த்து சேவை நீடிப்புச் செய்யப்படலாம். இப்பதவியை வகிக்கும் உச்ச வயதெல்லை 70 வயதை விஞ்சுதலாகாது. ஆயினும் அதற்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் (திடீர்) மரண விசாரணையாளர் ஒருவர் காரணங்களைக் காட்டி சேவையிலிருந்து நீக்கம் செய்யப் படலாம். நியமனங்கள் வழங்கப்படுகின்ற வெற்றிடமாகியுள்ள (திடீர்) மரண விசாரணையாளர் பிரிவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன.

4. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக (திடீர்) மரண விசாரணையாளர்களின் பணிகள் நியமனம் பெறுபவர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. இப்பதவிக்காக சம்பளம் எதுவும் செலுத்தப்படமாட்டாது. எனினும் மரண விசாரணையொன்றுக்காக 500 ரூபா கட்டண மொன்றும், மரண விசாரணையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளும் செலுத்தப்படும்.

6. பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம் :-

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ;

(ஆ) நியமனத்தை எதிர்பார்க்கும் பிரதேசத்தைக் கடந்த இரண்டு வருடமாக வதிவிடமாகக் கொண்டிருத்தல் ;

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 62 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் (விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருப்ப வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;

(உ) திடீர் மரண விசாரணையாளர் (முஸ்லிம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியில் பேச மற்றும் எழுதக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும் ;

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளன்று அரசாங்கத்திடமிருந்து மாகாண சபை நிதியமொன்றிலிருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிதியமொன்றிலிருந்து சம்பளம் அல்லது படிகளைப் பெறுகின்ற ஆட்களும் அரசாங்க கூட்டுத்தாப னங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் சபைகளின் உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களும் இப்பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

8. விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணமும் இணைத்து அனுப்பப்படுதலாகாது. ஆயினும், நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரரால் எல்லாத் தகைமைகளையும் உறுதிப்படுத்துவ தற்குப் போதுமான அளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டு மென்பதுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளும் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் ;

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஈ) நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோ கத்தரின் சான்றிதழ் ;

(உ) அண்மையில் பெறப்பட்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு ;

(ஊ) மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான வேறு சான்றிதழ்கள் ;

(எ) ஓய்வுபெற்ற விண்ணப்பதாரர்களின் ஓய்வுபெற்ற திகதியை உறுதிப்படுத்தும் எழுத்திலான சான்றிதழ்.

9. எல்லா விண்ணப்பங்களும் பின்வரும் மாதிரிப்படிவத்திற் கமைய தெளிவான எழுத்தில் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். தேவையான தகவல்கள் அனைத்தும் உள்ளடக்கப்படாமல் சமர்ப்பிக் கப்படுகின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக் கப்படும்.

10. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது தகைமைகள் பற்றிய உண்மையான விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும். மேலே 7 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள வகுதியைச் சேர்ந்த அல்லது இல. 6 அல்லது 8 ஆம் பந்திகளுக்காக பொய்யான தகவல்களை வழங்கு கின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் உண்மையான நிலைமை தெரியவருமிடத்து அத்தகைய விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் உடனேயே இரத்துச்செய்யப்படும்.

11. மேலும் திடீர் மரண விசாரணையாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் மேலே 9 ஆம் பந்தியின் பதவியொன்று நியமிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு நியமனம்பெற்ற திகதி தொடக்கம் இந்நியமனம் இல்லா தொழிக்கப்படும்.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2016, பெப்புருவரி 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திடீர் மரண விசாரணையாளர் பதவி**

| மாவட்டம் | | பிரதேச செயலாளர் பிரிவு | |
|---|---|---|---|
| சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றம் | | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | |
| சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையம் | | வதியும் கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தெளிவான எழுத்தில்) :----.
(குடும்பப் பெயரின்கீழ் கோடிடுக.)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. முகவரி :----.

3. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. பிறந்த திகதி :----.

6. 2016.03.31 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

7. பால் : ஆணா/பெண்ணா என்பது :----.

8. கல்வித் தகைமைகள் :

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(2) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடம் | தரம் | ஆண்டு | பாடம் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

9. தொழிற்றகைமைகள் :----.

10. தற்போதைய தொழில் :----.

11. முன்னர் புரிந்த தொழில் :----.

12. (அ) அரசாங்கத்தில், அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில்/ கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் தொழில் புரிகின்றீரா ? :----.

(ஆ) அத்தகைய சேவையொன்றிலிருந்து விலகியிருப்பின்/ஓய்வு பெற்றிருப்பின் விலகியதற்கான/ ஓய்வுபெற்றதற்கான காரணம் :----.

(இ) விலகியமை/ ஓய்வுபெற்றமை அங்கீகரிக்கப்பட்ட திகதி : ----.

13. (அ) உமக்கெதிராக எப்போதாவது தொழில்தருநரால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? :----.

(ஆ) அவ்வாறாயின் குற்றச்சாட்டின் தன்மையும் பெறுபேறுகளும் : ----.

14. (அ) (i) ஏதேனுமொரு தவறுக்கு எப்போதாயினும் உமக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதா ? :----.

(ii) நீங்கள் சம்பந்தப்பட்ட பிணக்கொன்றை மத்தியஸ்தம் செய்வதற்காக எப்போதாயினும் மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா ? : ----.

(ஆ) அவ்வாறாயின் அதன் பெறுபேறு :----.

15. (அ) தற்போது திடீர் மரண விசாரணையாளர் பதவியொன்றை வகிக்கின்றீரா ? :----.

(ஆ) அவ்வாறாயின், முதலாவது நியமனத்தைப் பெற்ற திகதி மற்றும் அமைச்சின் கோவை இலக்கம் :----.

16. இப்பதவிக்காக பிற தகைமைகள் எவையேனும் இருப்பின் அவை பற்றிய விபரம் :----.

17. நல்லொழுக்கச் சான்றிதழ்களை வழங்கும் இரு ஆட்களினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிப் பெயர்கள் :-

(i) :----.
(ii) :----.

என்னால் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | திடீர் மரண விசாரணையாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவு |
|---|---|---|
| கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை | பேராதனை பொது வைத்திய சாலை | கெட்டம்பே 259 |

3-324

## அரசாங்க சேவை ஆணைக்குழு

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு

### சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று தரம் III) பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்க்கும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இணைத்துக்கொள்ளப்படுவர். இதன்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட (இல. 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் நடவடிக்கை முறைக்கு அமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. தேவையான தகைமைகள் :

(i) ***கல்வி/ தொழில் தகைமைகள்***.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்/ உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) ***அனுபவம்***.- இலங்கையில் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று வருடங்களுக்குக் குறையாத தொழிற்படுநிலை தொழில் அனுபவம் பெற்றிருத்தல் ;

(iii) ***உடற்றகைமைகள்***.- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தகுந்த உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) *வேறு தகைமைகள் :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த குணநலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தது திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் ;
* சிறந்த ஆங்கில மொழி பிரயோகத் தேர்ச்சி மற்றும் ஆங்கில மொழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் இருத்தல் வேண்டும்.

3. *நியமனம் மற்றும் சேவை பற்றிய நிபந்தனைகள் :*

(i) இப்பதவி நிரந்தரமானதாகும் ;

(ii) நியமனம் 3 வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டதாகும். சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டு 3 வருடங்களுக்கிடையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் குறிப்பிட்டுள்ளபடி முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 01/2014 இற்கமைய நியமிக்கப்பட்டு 5 வருடங்களில், சேவைக்கு நியமிக்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் குறித்த மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். அரச கரும மொழிகள் அல்லாத மொழியில் சேவைக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தில் குறித்த மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசின் நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களம்சார் ஏனைய கட்டளைகள் ஆகியவற்றுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்தப் பதவிக்கு மாதாந்தம் ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 எனும் அளவுத் திட்டம் உரித்துடையதாகும். (2006.04.25 ஆந் திகதிய பொ. நி. சு. இலக்கம் 6/2006 இன் இல. எஸ். எல். 1 - 2006 சம்பள அளவு)

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குக் கீழ்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| | பாடம் | | உயர் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | **மேலதிகக் கல்வித் தகைமைகள்**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற சட்டம் பற்றிய பட்டம்<br>- முதல் வகுப்புச் சித்திக்கு<br>- இரண்டாம் வகுப்பு உயர்மட்ட சித்திக்கு<br>- இரண்டாம் வகுப்பு தாழ்மட்ட சித்திக்கு<br><br>சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் முதல் வகுப்புச் சித்திக்கு<br>சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்புச் சித்திக்கு<br>**குறிப்பு**.- சிறப்பு சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியிருந்தால் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்க வேண்டும்.<br>(உயர் தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்கு மாத்திரம்) | <br><br><br>20<br>15<br><br>10<br><br><br>15<br><br>10 | 20 |

| | பாடம் | | உயர் புள்ளிகள் |
|---|---|---|---|
| 2 | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | 15 |
| | சட்டம் பற்றிய கலாநிதி பட்டம் | 15 | |
| | சட்டம் பற்றிய ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப்பின் படிப்பு பட்டம் | 10 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறைசார் கற்கை நெறியொன்றுக்கு | | |
| | ஒரு வருடத்துக்குக் குறையாத பட்ட மேற்படிப்பு டிப்ளோமா அல்லது சட்டம் பற்றிய பட்ட மேற்படிப்பு டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்கு | | |
| | (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் எனும் அடிப்படையில் - அதிகூடிய புள்ளிகள் 15) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறைசார் ஆறு (6) மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா கற்கைநெறியொன்றுக்கு | | |
| | (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் எனும் அடிப்படையில் - அதிகூடிய புள்ளிகள் 15) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறைசார் மூன்று (3) மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் கற்கை நெறியொன்றுக்கு | | |
| | (ஒரு கற்கைநெறிக்கு 2 புள்ளிகள் எனும் அடிப்படையில் - அதிகூடிய புள்ளிகள் 10) | | |
| 3 | **மேலதிக அனுபவம் :** | | 30 |
| | சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம் :<br>- 6 மாதங்களுக்கு அதிகமாகவும் ஒரு (1) வருடத்திற்குக் குறைவானதும் - புள்ளிகள் 02<br>- ஒரு வருடத்திற்கு ஐந்து புள்ளிகள் எனும் அடிப்படையில் 30 புள்ளிகள் | | |
| | (அடிப்படைத் தகைமையைப் பெறுவதற்குத் தேவையான சட்டத்தரணியாகப் பணியாற்றிய 3 வருட சேவைக்காலம் தவிர்க்கப்பட்டு) | | |
| | (20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதிபதியொருவரிடமிருந்து பெற்ற சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதி செய்தல் வேண்டும்.) | | |
| 4 | **ஆங்கில மொழித் தேர்ச்சி** | | 15 |
| | ஆங்கில மொழி மூலமான பட்ட மேற்படிப்புப் பட்டம்/பட்டம்/பட்ட மேற்படிப்பு சட்டம் பற்றிய பட்டம்/ சட்டம் பற்றிய பட்டம் | | |
| | (குறித்த பரீட்சை வினாத்தாள் அனைத்துக்கும் ஆங்கில மொழி மூலம் விடையளித்தல் வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா கற்கைநெறிக்கு | 10 | |
| | (ஒரு (1) வருட காலம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிக்கு | | |
| | - ஆறு (6) மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 7 | |
| | - மூன்று (3) மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 5 | |
| | (அதிககூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 5 | **தகவல் தொழில்நுட்ப அறிவு** | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புக்காக தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றிருப்பதற்கு | | |
| | அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் ஒரு (1) வருடத்திற்கு அல்லது 1,500 மணித்தியாலங்களுக்குக் குறையாத தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்கு | 10 | |
| | அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிக்கு :<br>- ஆறு (6) மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 7 | |
| | - மூன்று (3) மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 5 | |
| | (அதிகூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 6 | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறன்** | | 5 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்.**- எல்லா வகையிலும் முழுமையான விண்ணப்பத்தை முன்வைத்தவர்கள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் அனைத்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் முன்வைக்கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்து வதற்கு கீழ்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ii) அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் :**

(அ) விண்ணப்பங்கள் 2016.04.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
தேசிய சகவாழ், கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு
இல. 40, புத்கமுவ வீதி,
இராஜகிரிய.

(ஆ) விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ ஆணைபெற்ற முப்படையொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது 22,935 ரூபாவிற்குக் குறையாத மாதாந்த திரட்டுச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்கப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்சமயம் அரச சேவையிலோ, மாகாண அரச சேவை யிலோ நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் தங்களின் விண்ணப்பங்களைத் தாங்கள் கடமையாற்றும் திணைக்களத்தின் தலைவர் ஊடாக முன்வைக்க வேண்டும்.

(உ) இதனுடன் உள்ள மாதிரிப்படிவத்திற்கு உட்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் தொடர்பில் எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- தங்களினால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள ஏதாவது தகவல் பொய்யானது அல்லது பிழையானது என நியமிக்கப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல் நியமிக்கப்பட்ட பின்னர் தெரியவருமாயின் அதற்கு உரித்தான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு சேவையில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களுக்கு இணைத்துக்கொள்ளுதல் அல்லது இணைத்துக்கொள்ளாதிருத்தல் ஆகியவற்றுக்கான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்தானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

வீ. பி. பர்ல் கே. வீரசிங்க,
செயலாளர்,
தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல் மற்றும்
அரச கரும மொழிகள் அமைச்சு.

தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல் மற்றும்
அரச கரும மொழிகள் அமைச்சு,
இராஜகிரிய.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு தரம் III இற்கு ஆட்சேர்த்தல்**

(அலுவலக உபயோகத்திற்கு)

1. 1.1 முதல் எழுத்துடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. தொலைபேசி இலக்கம் :

நிலைப்படுத்திய :----. கையடக்க :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. 5.1 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

5.2 2016.04.11 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. **கல்வி/தொழில்சார் தகைமைகள் :**

**6.1** பட்டம் பற்றிய விபரம் :

(i) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) மொழிமூலம்:----.

அல்லது

(iv) இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட திகதி :----.

6.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்குப் பெற்றுள்ள சித்தி :----.

7. சட்டத்தரணியாக உள்ள அனுபவம் (ஆண்டுகள்) :----.

8. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? (ஆம் எனில், திகதி மற்றும் வழக்கு இலக்கத்துடன் விபரங்களைத் தருக.) :----.

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

...................................... ஆகிய என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானதும் சரியானதும் எனப் பிரகடனம் செய்கின்றேன். நான் அரச சேவையில் நீக்கப்படவோ அல்லது கருணை மாற்று என்ற வகையில் வினைத்திறன் இன்மை காரணமாக சேவையில் இருந்து கட்டாய ஓய்வுபெறவோ இல்லை என உறுதிகூறுகின்றேன். இதில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் எதுவும் பொய் என்றோ அல்லது பிழை என்றோ என்னைத் தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவரின் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான தகைமையற்றவராக ஆவதற்கு உட்படுவதுடன், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித இழப்பீடும் வழங்காது சேவையில் இருந்து இடைநிறுத்தப்படுவதற்கு ஆளாவேன் என நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................... (முழுப்பெயர்) அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், .................... ஆந் திகதி அவரின் கையொப்பம் என் முன்னிலையில் இடப்பட்டது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையூடாக சான்றுப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

(அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ஆணைபெற்ற முப்படையொன்றின் உத்தியோகத்தரொருவர் அல்லது 22,935 ரூபாவிற்குக் குறையாத மாதாந்தச் சம்பளம் பெறும் நிரந்தர அரசாங்கப் பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிசெய்யப்பட வேண்டும்.)

11. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் இருப்பவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ......................... (முழுப்பெயர்) தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், ............. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிகூறுகின்றேன். அத்தோடு இந்தப் பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையூடாக சான்றுப்படுத்த வேண்டும்.)

3-351

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

### இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளும் இரண்டாம் மொழிப் பரீட்சையும் - 2015/2016

இலங்கை வெளிநாட்டுச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் 2016 யூன் மாதத்தில் கொழும்பிலும் வெளிநாடுகளிலுமுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடாத்தப்படும். வாய்மொழிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

2. இரண்டு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளுக்கும் ஒரே நேரத்தில் பரீட்சார்த்தி தோற்றுவதை இயலச் செய்யக்கூடிய விதத்தில் கால அட்டவணை தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்.**- முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைகளை நிருவகிக்கின்ற பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "அ" இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் இலங்கை வெளிநாட்டு சேவை தொடர்பில் காணப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "ஆ" இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்களின் விருப்பின் பேரில் அவர்கள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைகளின் பாடங்களுக்கு ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர். இரண்டாம் மொழிப்

பரீட்சைக்குத் தோற்றிய உத்தியோகத்தர்களுக்கான வாய்மொழிப் பரீட்சைகளை அதே இடத்தில் அதே நேரத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

4. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு உத்தியோகத்தர்கள் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு.:-

**1 ஆவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| | பகுதி I | |
| 01 | நிதி | 3 |
| 02 | இலங்கையின் வரலாறும் புவியியலும் | 3 |
| | பகுதி II | |
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 04 | இராச தந்திர செயல்முறை | 3 |
| 05 | சர்வதேச விவகாரங்கள் | 3 |
| 06 | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கு விதிகள் மற்றும் கணினி அறிவு: | 3 |

**2 ஆவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| | பகுதி I | |
| 21 | இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும் | 3 |
| 22 | நிருவாகம் (அ) அலுவலக முறைமைகளும் மற்றும் முறைகளும் (ஆ) தாபன விதிக் கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II) | 3 |
| | பகுதி II | |
| 23 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 24 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 25 | சர்வதேச விவகாரங்கள் | 3 |
| | வெளிநாட்டு மொழிகள்: | |
| 07 | அரபு மொழி | 2 |
| 08 | பிரஞ்சு மொழி | 2 |
| 09 | ரஷ்ய மொழி | 2 |
| 10 | ஸ்பானிய மொழி | 2 |
| 11 | ஹிந்தி மொழி | 2 |
| 12 | சீன மொழி | 2 |
| 13 | ஜேர்மன் மொழி | 2 |
| 14 | யப்பான் மொழி | 2 |
| 15 | ஆங்கில மொழி | 2 |
| 16 | கொறியன் மொழி | 2 |

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| | இரண்டாம் மொழிகள் : | |
| 30 | சிங்களம் (எழுத்து மூலம்) | 2 |
| 31 | தமிழ் (எழுத்து மூலம்) | 2 |
| 32 | ஆங்கிலம் (எழுத்து மூலம்) | 2 |
| 33 | சிங்களம் (வாய்மொழி மூலம்) | |
| 34 | தமிழ் (வாய்மொழி மூலம்) | |
| 35 | ஆங்கிலம் (வாய்மொழி மூலம்) | |

5. இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றும் உத்தியோகத்தர்களின் கவனம் கீழே மீளவெளியிடப்பட்டிருக்கும் 1996.09.04 ஆம் திகதியிடப்பட்டதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்பால் ஈர்க்கப்படுகின்றது.

"திணைக்களப் பரீட்சை (பதவியுயர்வு மற்றும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை உட்பட) பதவியுயர்வுப் பரீட்சை இன்னும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஆகியவற்றுக்கான மொழி மூலமானது உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவையில் சேருவதற்காக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். மேலும் போட்டிப் பரீட்சையின்றி அடிப்படை ஆட்சேர்ப்பு நிகழ்ந்திருக்கும் பட்சத்தில் பதவியுயர்வு/ வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான மொழி மூலமானது உத்தியோகத்தர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகைமை பெற்ற மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும்.

*5.1 பரீட்சை முடிவுகளை வெளியிடுதல்.-* வேட்பாளர்கள் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு 40 வீதப் புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். முதலாவது, இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்குரிய தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெறுபேறடங்கிய இரு வெவ்வேறான பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்கள் பரீட்சைகள் ஆணையாளரினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

6. விண்ணப்பதாரிகள் வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் வகையில் பிற நாட்டு மொழிகளிலான வினாத்தாள்களைத் தவிர்த்து சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களைத் தயாரிக்க பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது.

7. வேட்பாளர்கள் பரீட்சைக்குத் தோற்ற உரித்தற்ற மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவரது பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் ஏ4 அளவான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இதனுள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் 1 தொடக்கம் 8 வரையுள்ள விடயங்கள் முதல் பக்கத்திலும் ஏனைய விடயங்கள் இரண்டாம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். உரிய விபரங்கள் தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது தலையங்கத்தில் கூறப்பட்ட பரீட்சையின் பெயர் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இருத்தல் வேண்டும். இரு பரீட்சைகளுக்குமாகத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பரீட்சை தொடர்பிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

9. பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கின்ற நிபந்தனைகள், ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

10. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு 2016, ஏப்பிறல் 12 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கக்கூடிய வகையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வெளிநாட்டு நிருவாகப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரிபவர்கள் தமது விண்ணப்பங்களை தூதரகத் தலைவருக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பங்களை சரிவரப் பூர்த்திசெய்து சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். குறித்த நேரத்தில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவம் மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதிகளுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு தொலைநகல் மூலம் முறைப்பாடு செய்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதி அட்டையின் நிழற்படப் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக அம்முறைப்பாட்டில் தொலைநகல் இலக்கமொன்றை அங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

12. மேற்படி 11 ஆம் பந்தியில் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை அனுசரிக்கத் தவறும் வேட்பாளர்களின் கடிதத் தொடர்புகள் எவையும் பரீட்சைக்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

13. பின்வரும் ஆவணங்கள் பரீட்சை நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடியனவாகும்:-

(1) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

14. முதல் தடவை இப்பரீட்சைக்குத் தோற்றும் வேட்பாளர்களுக்கு பரீட்சைக் கட்டணங்கள் விலக்களிக்கப்படுவதுடன் ஏனைய வேட்பாளர்களுக்கு பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு அமையும்.

(அ) முதலாவது அமர்வு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பாகத்திற்கு) கட்டணம் இலவசம் ;

(ஆ) அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அமர்வுக்கும்-

| | ரூ. ச. |
|---|---|
| முழுப்பரீட்சைக்கும் | 1,000 |
| ஒரு பாடத்திற்கு | 500 |
| வாய்மொழிமூலப் பரீட்சை | 300 |

கட்டணங்கள் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பிற்கு செலுத்தப்படும் வண்ணம் எந்தவொரு மாவட்டச் செயலகத்திலும் அல்லது பிரதேச செயலகத்திலும் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச் சீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படல் வேண்டும்.

பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்வது சிறந்தது.

15. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்த விடயத்தின் மீதும் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகும். பரீட்சையைப் பொறுத்தவரையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாகும்.

சித்ராங்கனீ வகீஸ்வர,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 01,
2016, மாச்சு 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு - இலங்கை

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான
1 ஆம் 2 ஆம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளும் இரண்டாம்
மொழிப் பரீட்சையும் - 2015/2016

மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(இயைபுள்ள இலக்கத்தைக் கூட்டில் இடுக.)

(1) விண்ணப்பித்த பரீட்சை :
(இயைபுள்ள இலக்கத்தைக் கூட்டில் இடுக.)

| பரீட்சை | உரிய இல. |
|---|---|
| பரீட்சை வினைத்திறமைகாண் தடை 1 | 1 |
| பரீட்சை வினைத்திறமைகாண் தடை 2 | 2 |
| இரண்டாம் மொழி | 3 |
| வெளிநாட்டு மொழி | 4 |

2. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) கடைசிப் பெயருக்குப் பின்னால் முதலெழுத்துக்களைக் குறிப்பிடவும்.
(உ-ம் GUNAWARDHANA H. M.S.K.) :----.

(iii) முழுப்பெயர்:- (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்புவதற்காக)

4. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

6. பால் : ☐
ஆண் -0, பெண் -1
(உரிய இலக்கத்தைக் கூட்டில் குறிக்கவும்)

7. இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான நியமனத் திகதி:-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8. தற்போது வகிக்கும் பதவி :----.

9. விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் : ☐
(உரிய இலக்கத்தைக் கூண்டில் இடுக)

10. அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விண்ணப்பிக்கும் பரீட்சைக்குரிய பாட எண்களைச் சுட்டிக்காட்டி தோற்றும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (விண்ணப் பத்தில் குறித்துக் காட்டப்பட்ட பாடங்களைத் தவிர ஏனைய பாடங்களுக்குத் தோற்ற பரீட்சாத்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்.)

| பாடம் | பாட எண் |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |
| (vi) | |

11. பரீட்சார்த்தி முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு முன்னர் தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்பவற்றைக் குறிப்பிடுக.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிவதுடன் மேலே குறித்துக் காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்கு நான் தோற்றத் தகுதியுடைய வனாக உள்ளேன் எனவும் உறுதி கூறுகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள், ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நடப்பேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான ........................... ஆம் இலக்கப் பற்றுச் சீட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்திய கட்டணம் :
ரூபா :----.

----,
விண்ணப்பதாரர் கையொப்பம்.

திகதி:----.

பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கப்படுகின்றது :

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .............................. என்பவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட் சைக்குத் தோற்ற அவர் தகுதியுடையவர் என நான் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் அவரது கையொப்பத்தையும் உறுதிப் படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை).

**பின்னிணைப்பு 'அ'**

***சிங்களம்.***- சிங்கள மொழியிலான பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். இப்பரீட்சையில் சித்தியடைய 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை இவ்வினாப்பத்திரத்தில் பரீட்சார்த்திகள் பெற்றி ருத்தல் வேண்டும். வினாப்பத்திரமானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் :-

(i) இலக்கணம்.

(ii) சிங்களத்தில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கைகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்.

(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலக ஆவணமொன்றை சிங்களத்திற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கி யிருக்கும் :-

(i) சிங்களம் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை சிங்களத்தில் உரைபெயர்த்து விளக்கிக் கூறல்.

(ii) சிங்களத்திலுள்ள மனுவொன்றை வாசித்தல்.

(iii) *உரையாடலும் உரைபெயர்ப்பும்.*- இப்பரீட்சையின் நோக்கம் வெவ்வேறு சுதேசிய மொழிகளைப் பேசு கின்றவர் களால் பேசப்படும் சிங்கள மொழியை பரீட்சாத்திகள் புரிந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடு வதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்தி களை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

***தமிழ்.***- தமிழ் மொழியிலுள்ள பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட தாகும். பரீட்சார்த்திகள் சித்தியடைய 40% அல்லது அதற்கு

மேற்பட்ட புள்ளிகளை இவ்வினாப்பத்திரத்தில் பெறுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அது அமையும் :-

(i) இலக்கணம்.
(ii) தமிழில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கையை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தல்.
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலகக் கடிதம் அல்லது ஆவணத்தின் பகுதியை தமிழிற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:-

(i) தமிழ் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை தமிழில் மொழிபெயர்த்து விளக்கிக் கூறுதல்.
(ii) தமிழிலுள்ள மனுவொன்றை வாசித்தல்.
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்:- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் தமிழ் மொழியை பரீட்சார்த்திகள் புரிந்து கொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**ஆங்கிலம்.**- ஆங்கில வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் பரீட்சார்த்திகள் சித்தியடைய 40% புள்ளிகளையேனும் இவ்வினாப்பத்திரத்தில் பெறுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அது அமையும் :-

(i) இலக்கணம்
(ii) கிரகித்தல்
(iii) சுருக்கியெழுதுதல்
(iv) அறிக்கை மற்றும் கடிதம் எழுதுதல்
(v) சொல்வளம்

பரீட்சார்த்திகளின் தகவல்களுக்காக வினாத்தாள்களின் மாதிரியொன்று கீழே தரப்படுகின்றது :-

பகுதி அ

(a) Fill in the blanks with the correct form of the verb given within brackets:-

During the last war our country .............1 (be) a British Colony .................2 (take) a full part in the war effort. Consequently our tea, rubber and coconut ..............3 (ship) to Briton at very favourable prices and the foreign exchange we ..................4 (earn) ................5 (accumulate) as assets. Again during the Korean War in the early fifties our products .................7 (not have) any exchange problem. However, political independence .............8 (not given rise) to any effort to...................9 (build up) our economy we ................10 (be) a nation of consumers and we .................11 (squander) our foreign exchange on consumer goods which ................12 (can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we ................ (begin) to feel the pinch when our primary products ................14 (fail) to command good prices in the world market while our requirements of food both rice and subsidiary food stuffs ............15 (rise) in price.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary)

As Assistant Secretary ...................16 charge ..............17 subjects, it was my duty to convene groups of officers dealing ................18 different aspect of development work in the Ministry ....................19 time to time. They discussed ...............20 various problems that they confronted and which they could not cope ................21 on their own. We were thus able to share our experience .............22 each other and make concrete proposals .............23 the Secretary every month. He in turn put ..............24 his own plans for discussion ................25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words.

26. Har...................ment (rass/as/ass)
27. Ember.............(rass/as/ass)
28. Tol..................(arreance/earnce/erence)
29. Par...................arian (liament/limen/liment)
30. Bal...................ing (let/lat/lot)
31. Itin...................(erary/arary/erarie)
32. Pers..................(everance/everence/ewerence)
33. Bour..................(geoise/joursie/juwarsy)
34. Prolet.................(ariet/ariat/eriyat)
35. Com..............ate(memorr/emor/memor)

(d) In each of the following statements underline the correct word within brackets:-

36. The inventory was checked by the Board of (survellance/survey/surveyours).

37. At the inquiry I had to be satisfied that accused officer had (contradicted/contravened/contaminated) the regulations.

38. Every receipt should have a (counterfoil/counterfeit/counterpane) for the purpose of audit.

39. There was a possibility that the prosecution had (fabricated/fumigated/promulgated) the evidence.

40. (Discrete/discretionary/discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.

41. The Police Party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.

42. The entire staff turned upon (facilitate/infiltrate/felicitate) the watcher on his retirement.

43. In times of national crisis we must avoid (luxuriant/luxurious) habits.

44. Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/morals) of the peole.

45. Candidates are advised to use (stationary/stationery) sparingly owing to the acute paper shortage.

(e) Underline the correct phrase in the brackets that means the same as the word or phrase underlined in each sentence:-

46. In good management the boss should support his staff in their work (back out/back up/back away)

47. The sales and replacement of stocks amounted to over Rs.5,000 (turn out/turn up/turn away)

48. We were warned at the start not to let out work get into arrears (set out/outset)

49. The younger son wasted his father's wealth in a few years (ran over/ran through)

50. I wanted to see the film, but the queue deterred me from going (put away/put off)

**Part B**

Read the following passage carefully and then answer the questions set out below:

Most modern political ideals such as, for example, as justice, liberty, constitutional government and respect for the law or at least the definition of them, began with inflection of Greek thinkers upon the institutions of City State. But in the long history of political thought the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City States was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern world, and the whole climate of opinion in which the work was done different. Their problems though not without their analogies in the present, were never identical with modern problems, and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails. In order to understand at all accurately what their theories meant is necessary first to realize at least roughly what kind of institutions they had in view and what citizenship connected, as an effect as and an ideal, to the public for whom they wrote. For this purpose the Government of Athens is especially important, partly because it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an arrangement of a small territory dominated by a single City was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a thick (right mark) against the correct answer:-

51. Athens is significant for the students of Greek political thought mainly because:-

(a) it was the most powerful of the Greek City State;
(b) its ideals had been carefully studied by the Greek themselves;
(c) it had the most ideal form of Government;
(d) it is the best known of the Greek City State.

52. Greek political thought was concerned with problems:-

(a) entirely unrelated to;
(b) identical with;
(c) different from Analogous but to;

53. The moral and religious basis of Greek political idea is:-

(a) very similar to modern moral and religious ideas;
(b) unknown;
(c) very different from modern moral and religious ideas.

54. It is:-

(a) easy;
(b) not at all easy;
(c) impossible, for a modern man to imagine what life was like in a Greek City State.

55. In comparison with the ancient Greek City States are:-

(a) very large;
(b) very small;
(c) about the same size.

56. The population of ancient Greek City State was:-

(a) much less than 300,000
(b) over 3 million
(c) just over 300,000

57. The City State of Athens comparisons:-

(a) a small territory govern by a single City;
(b) a large territory govern by a number of cities;
(c) a small territory with village councils;
(d) a large territory with a decentralized administration.

58. The different times in the history of the world people:-

(a) have thought in basically the same way;
(b) have thought in different ways;
(c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek political thought:-

(a) because the Greek City States was very similar to modern states;
(b) in spite of Greek City State being very different from modern states;
(c) because modern political theorists are students of Greek Philosophy.

60. The meaning of political ideal at a particular moment in European History since the time of the Greek can be defined only be:-

(a) relating it to its context;
(b) tracing it back to its original meaning among the Greeks;
(c) investigating the meaning of the Greek word for it;
(d) taking into account only those features in it which have persisted through out its history.

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly:-

Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

EITHER

62. Write a letter to the Head of an Educational Institute in an English speaking country, setting out the following information in an orderly manner:-

(i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have been consulted by the institution concerned in that country:
(ii) The G.C.E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an ordinary pass in London (Ordinary Level):
(iii) The receipt of the letter sent to the Commissioner General of Examinations is acknowledged:
(iv) Any further information in this matter may be obtained from the Embassy of the Republic of Sri Lanka in that country:

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hours clock in this country stating the advantages of such a measure.

**பின்னிணைப்பு 'ஆ'**

1. **முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை** :

1.1 முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலகர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

1.2 பின்வரும் பாடப்பரப்புகளில் நடாத்தப்படும் பரீட்சைகள் :-

**பகுதி I :**

(i) நிதி - நிதி தொடர்பான பரீட்சை பின்வரும் விடயப் பரப்புக்களின் அடிப்படையில் அமையும்:

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)

(ஆ) நடைமுறை ஆண்டின் மதிப்பீடுகள். உ-ம் : அவற்றின் ஒழுங்குகள், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்.

(இ) கச்சேரிகளினுள் பேணப்படும் குறித்த கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள்.

(ii) இலங்கையின் வரலாறும் புவியியலும் :

**பகுதி II - விசேட வினாத்தாள் :**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளிவிவகார அமைச்சின் ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி அறிவு

1.3 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சாத்திகள் சித்தியடைய ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 வீதமான புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

1.4 அலுவலர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

2. **இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை** :

2.1 இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

2.2 **பின்வரும் பாடங்களிலான பரீட்சை** :

**பகுதி I -**

(i) இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும்,
(ii) நிருவாகம் - இவ்வினாத்தாள் பின்வரும் பரப்புகளை உள்ளடக்கியிருக்கும்:

(அ) அலுவலக நடைமுறைமைகளும் நிறுவன முறைமைகளும்.

(ஆ) தாபன விதிக் கோவை - தொகுதி I மற்றும் தொகுதி II

**பகுதி II - விசேட வினாத்தாள்கள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்

2.3 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சார்த்திகள் சித்தியடைய ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையேனும் பெறுதல் வேண்டும்.

2.4 அலுவலர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி அப்பகுதியில் சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**குறிப்பு**:- (i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புகளை உள்ளிட்டு இலங்கை அரசின் பாராளுமன்ற முறைமை மற்றும் அரசியலமைப்பு விருத்திப் பரிணாம வளர்ச்சி போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கும். சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் இன்னும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் மற்றும் உரிமைகள், தூதுவராலயச் சட்டம் மற்றும் உடன்படிக்கைகளுக்கான சட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்று விளங்கும் அலுவலர் ஒருவர், அவர் உரிய பரீட்சையில் அப்பாடங்களில் சித்தியொன்றைப் பெற்றுள்ளார் எனக்கருதி அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் எனும் வினாத்தாளுக்கு அவர் தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

3. **வெளிநாட்டு மொழிகள்** :

3.1 வெளிநாட்டு மொழிகள் :

(i) அரபு மொழி
(ii) பிரஞ்சு மொழி
(iii) ரஷ்ய மொழி
(iv) ஸ்பானிய மொழி
(v) ஹிந்தி மொழி
(vi) சீன மொழி
(vii) ஜேர்மன் மொழி
(viii) யப்பான் மொழி
(ix) ஆங்கில மொழி
(x) கொரியன் மொழி

3.2 வெளிநாட்டு மொழிகள் வினாத்தாள்கள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும். சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்திகள் 40% ஆன புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

* மேற்கூறிய பரீட்சையின் பிற நாட்டு மொழி தொடர்பான விடயப் பரப்புக்கள் இவ் வர்த்தமானியின் ஆங்கிலப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளன.

3-245

---

## சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2016, மாச்சு

2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2016.04.10 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பிவைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப் படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியம். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப் பங்கள் 2016.03.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட் சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூரணப் படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுபடுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிறிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2016.03.24 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட 35 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 1-4 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 4(ஊ)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

5. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்காத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

7. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 **எழுத்துப் பரீட்சை**

7.1.1 தாபனவிதிக்கோவை
(நேரம் : 02 மணித்தியாலம்) 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- மொத்தப் புள்ளிகள் 100

பாடவிதானம்
(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக் களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளும்
(iii) தாபனவிதிக்கோவை
(அ) I ஆம் பிரிவு VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.
(ஆ) II ஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்
(நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம்
சுகாதாரக் கைநூல்
(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்
(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 கணக்கியல் :
(நேரம் : 02 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,
மொத்தப்புள்ளிகள் - 100.

பாடவிதானம்

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள்
(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி
(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

I ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189

V ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260

VI ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394

VII ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 488, 493

XIII ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிக் கோவை :

1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்

2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை**.- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளவிடுதலின் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் பிரிவில்/ விசேட இயக்கத்தில்/ நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

எம். பீ. எல். ரகுமான்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் II),
சுகாதாரம், போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருக்காக.

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2016, பெப்புருவரி 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2016, மாச்சு**

1. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) : -----.

(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி :

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/தரம் II : -----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் "x" குறியை இடவும்.

| | | | |
|---|---|---|---|
| வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் | ☐ | தாபன விதிக் கோவை | ☐ |
| கணக்கியல் | ☐ | | |
| சிங்களம் வாய்மொழி | ☐ | தமிழ் வாய்மொழி | ☐ |

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

(உரிய கூண்டினுள் ( ✓ ) அடையாளத்தை இடவும்)

4. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது :

மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- **(தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டி னுள் சரி "✓" அடையாளமிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | | களுத்துறை | | அம்பாந்தோட்டை | |
| அம்பாறை | | களுத்துறை | | காலி | |
| பதுளை | | வவுனியா | | குருநாகல் | |
| அனுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | |
| திருகோணமலை | | | | | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 35.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) : -----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) : -----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? : -----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

| முத்திரைக் கூடு<br>(முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

6. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்–

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ (முதன் முறை அல்லாதபடியால் ரூபா ..........பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7. சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கையளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் I வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
திகதி :-----.

8. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/ திருமதி/ செல்வி .................................................. என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

* தேவையற்றனவற்றைக் கீறிவிடவும்.

9. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :

திருவாளர்/ திருமதி/ செல்வி .................................... என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/ இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(*தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

3-316

---

## திருத்தம்

### கல்வி அமைச்சு

இலங்கைக் கல்வி நிருவாக சேவை III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2016.01.01 ஆந் திகதிய 1948 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பரீட்சை அறிவித்தலில் கீழ்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது :

சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படை, மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை என்பவற்றிற்கு உரிய பொதுவான திருத்தங்கள் கீழ்வருமாறு அமைகின்றது :

* முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் விண்ணப்பதாரிகள் இலங்கைக் கல்வி நிருவாக சேவை III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்ளும் சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படை, மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தோற்றிய தடவை எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

* பட்டம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் பெற்றிருத்தல் வேண்டும்.

* ஏனைய எல்லாத் தகைமைகளும் 2016.02.01 ஆந் திகதியன்று பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2016.04.11 ஆகும்.

* 2016.02.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரர்கள் திரும்பவும் விண்ணப்பங்களை அனுப்புதல் அவசியமற்றது.

மேற்படி திருத்தங்களுக்கு மேலதிகமாக சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படை, மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைக்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களும் உரித்தாகும் :

சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சை - 2015/2016

6. **வயதெல்லை**.- 2016.02.01 ஆந் திகதியன்று வயது 58 ஐ விடத் தாண்டாது இருக்க வேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015/2016

1.(ஆ) இன் கீழே உள்ள அட்டவணைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பந்தி நீக்கப்படுகின்றது. (இடநிலைப்படுத்தலுக்குரிய)

2. (ii) இந்த நியமனம் நிரந்தரமானது ; ஓய்வூதியம் கொண்டது (அரச சேவையில் ஏற்கனவே உள்ள உத்தியோகதர்தர்களுக்காக)

6. வயதெல்லை.- 2016.02.01 ஆந் திகதியன்று வயது 52 ஐ விடத் தாண்டாது இருக்க வேண்டும்.

9. (iii) (ஆ) இன்கீழ் காட்டப்பட்டுள்ள 15 தொழில்நுட்பவியல் பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் என்ற நிரலில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் என்பதற்கிடையில் "அல்லது" என உட்சேர்க்கப்பட்டுள்ளது.

9. (iii) (ஆ) இன்கீழ் காட்டப்பட்டுள்ள 14 அழகியற் கலையின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மேலைத்தேய சங்கீதம் மற்றும் நாடகமும் அரங்கியலும் எனும் பாடங்களும் 15 தொழில்நுட்பவியல் பாடத்தில் மற்றும் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் மற்றும் அதற்குரிய தகைமை நீக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குரிய மாதிரி விண்ணப் பப்படிவத்தில் இலக்கம் 12 பந்தி மற்றும் அதன்கீழ் குறிப்பிடப்பட் டுள்ள அட்டவணை நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015/2016

வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட "தகைமை கொண்டோரினைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக அரச சேவை ஆணைக்குழுச் சபையின் உத்தவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன" என்பது, "கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமை கொண்ட விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன" எனத் திருத்தப்படுகின்றது.

1. (ஆ) இல் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் மேலே காட்டப்பட்டுள்ள பந்தி நீக்கப்படுகின்றது. (இடநிலைப்படுத்த லுக்குரிய)

2. (ii) இப்பதவி நிரந்தரமானது.

5. **வயதெல்லை**.- 2016.02.01 ஆந் திகதியன்று வயது 22 இற்குக் குறையாமல் இருக்க வேண்டியதுடன் 32 வயதினை விடத் தாண்டாமலும் இருக்க வேண்டும்.

திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 8 பந்தி மற்றும் அதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை நீக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2016, மாச்சு 01.

3-431

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.